# ஜொராஸ்த்ரர் யார்? காஞ்சி சுவாமிகள் உரை



கட்டுரையாளர்- லண்டன் சுவாமிநாதன்; கட்டுரை எண் 758, தேதி 25/12/13

காஞ்சி பரமாசார்ய சுவாமிகள், எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் சொன்ன ஒரு கருத்து ஒரு சுவையான, முக்கியமான கருத்து ஆகும். எப்படியோ இது பலருடைய கவனத்தை ஈர்க்காமல் போய்விட்டது. இதோ அவருடைய சொற்பொழிவின் ஒரு பகுதி:

Talk ஸம்ஸ்காரங்கள் 14-11-1932


“ இப்பொழுது பாரஸீகர்கள்தான் அக்கினியைக் காப்பாற்றி வருகிறார்கள். அவர்களுடைய மதக் க்ரந்தத்திற்கு ஜெண்டவஸ்தா என்று பெயர்; சந்தோவஸ்தை என்பது அப்படி வந்திருக்கிறது. ஜொராஸ்த்ரர் என்பவர் அவர்களுடைய ஆசார்யர். அப்பெயர் சௌராஷ்ட்ரர் என்பதன் சிதைவுதான். இரான் தேசம் அவர்களுடையது. ஆர்யதேசம் என்பது அப்படி மாறிவிட்டது அவர்கள் அக்கினி அணைந்து போனால் அதிகச் செலவு செய்து பெரிய பிராயச்சித்தம் பண்ணிக் கொள்கிறார்கள். நம்மிடத்தில்

அக்கினி காரியம் 30 வருஷ காலமாகக் குறைந்துவிட்டது. வாழ்க்கை மாறிவிட்டது. அதிக சிரத்தை இருந்தால் வைத்துக் கொண்டி ருக்கலாம். சிரத்தை இல்லாததற்கு இந்தக் கால படிப்பு ஒரு காரணம்”.

Talk விவாஹம் 17-11-1932

“ பாரசீக தேசத்து ஜனங்களிடத்தில் மாறுபட்ட நம்முடைய வைதீகானுஷ்டானம் இருக்கிறது. அவர்களுடைய பிரதான மதக் கிரந்தத்துக்கு ஜெண்டவஸ்தா என்ற பெயர் இருக்கிறது. அது சந்தோவஸ்தை என்பதன் திரிபு. சௌராஷ்ட்ர தேசத்திலிருந்து ஒருவர் போனார். அவர் அவ்ர்களுக்குக் குருவாக ஏற்பட்டார். அவரை சௌராதஸ்தர் என்று சொல்லுகிறார்கள். சௌராஷ்ட்ரர் என்பதன் திரிபுதான் அது. அவர் ஸந்ததிதான் பாரஸீகர்கள். ருக் வேதத்தில் ‘அக்னிமீளே புரோஹிதம்’ என்று சொல்லியிருக்கிறது. அக்கினியில் பரமேஸ்வரனை ஆராதிக்க வேண்டும்.”

சுவாமிகள் உரை முற்றும்; இனி வேறு ஒரு கதை:



## சுவையான பாரசிகக் கதை

பாரசீகர்கள் குஜராத்தில் வந்து குடியேறியது பற்றி 500 ஆண்டுகளாக ஒரு கதை பேசப்பட்டு வருகிறது. யாதவ ரானா என்ற மன்னர் காலத்தில் பார்ஸீ மதத்தினர் ஈரானிலிருந்து குஜராத்துக்கு வந்தனர். ஈரான் நாடு அராபியர் வசமானவுடன் முஸ்லீம்கள் கொடுமை தாங்காமல் அவர்கள் ஓடிவந்தனர். யாதவ ரானாவைச் சந்திக்க ஒரு குழு அரண்மனைக்குச் சென்றது. அதில் பார்ஸீ மத குருமார்கள் இருந்தனர்.

வந்தேறு குடியினர் தன்னைச் சந்திக்க வரப்போகிறார்கள் என்ற உடனேயே மன்னர் பதிலைத் தயாராக வைத்திருந்தார். அவர்கள் குடியேற அனுமதி கேட்பர். நாம் இல்லை என்று சொல்லி விடுவோம் என்று திட்டம் போட்டார். ஆனால் வருவோர் மத குருமார்கள் என்பதால் மனம் நோகாத படி நாசூக்காக சொல்ல திட்டம் போட்டார்.

ஒரு கோப்பையில் விளிம்பு வரை வழியும் அளவுக்கு பாலை ஊற்றி அதை பார்ஸீ மத குருமார்கள் முன்னர் வைத்தார் மன்னர். இதன் பொருள்: "இந்த இடம் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகிறது; உங்களுக்கு இடமில்லை". உடனே குருமார்கள், ஒரு பிடி சீனியை எடுத்து அதில் போட்டனர். சீனி அதில் கரைந்துவிட்டது. பால் சிறிதும் வெளியேறவில்லை. மன்னருக்கு அதன் பொருள் புரிந்தது. " உங்கள் இந்து சமுதாயத்தோடு நாங்கள் இரண்டறக் கலந்து விடுவோம். ஏனைய மதத்தினர் போல 'அத்தைக் கொடு, இத்தைக் கொடு' என்று கொடி பிடிக்க மாட்டோம்". இந்த அணுகுமுறை மன்னர் யாதவ ரானாவின் உள்ளத்தை உருக்கிவிட்டது. அவர்

எப்போது ஆண்டார் என்று தெரியவில்லை ஆனாலும் இது 1200 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருக்க வேண்டும் என்று ஊகிக்க முடிகிறது.

இன்று வரை பார்ஸீ மதத்தினர் சொன்ன சொல் மாறாமல் அமைதியான ஒரு சமுதாயமாக வாழ்கின்றனர். இந்தியாவின் அணுசக்தி, தொழில்துறை முன்னேற்றத்துக்கு பெருமளவில் உதவியுள்ளனர்.

இப்போது எனது கருத்துகளைக் கூறுகிறேன். இந்தியாவில் அவர்கள் ஏன் குஜராத்துக்கு வந்தனர்? என்ற கேள்வியை எழுப்பினால் காஞ்சி பரமாசார்ய சுவாமிகள் சொன்ன கருத்து வலுப்படுகிறது. ஜொரஸ்த்ரர் குஜராத்திலுள்ள சௌராஷ்ட்ரா பகுதியில் இருந்து சென்றதால்தான் அவர்கள் உரிமையோடு குஜராத்துக்கு வந்தனர் என்று நான் கருதுகிறேன். ஆக அவர் சௌராஷ்ட்ரா பகுதியைச் சேர்ந்தவர், அதையே அவர்கள் ஜொராஸ்த்ரர் என்று திரித்து விட்டனர்.

அது சரி, ஜொராஸ்த்ரர் பற்றி ஆராய்ச்சி நூல்களும் கலைக் களஞ்சியங்களும் என்ன சொல்லுகின்றன?



அவர் பிறந்த இடமும் தெரியாது; அவர் வாழ்ந்த காலமும் தெரியாது. அந்த மதம் பரலாகப் புழங்கிய ஈரான் என்ற தேசத்தின் பெயர் 'ஆர்ய' என்ற சொல்லில் இருந்து வந்தது எனபதை எல்லோருமறிவர். ஆனால் ஜொராஸ்த்ரர் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் இருந்து கி.மு. பத்தாம் நூற்றாண்டு வரை வாழ்ந்திருக்கலாம் என்றும் அவர் ஈரானில் பிறந்திருக்கலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது.

இதைவிட முக்கியமான விஷயம் அக்னியை (தீயை) வழிபடும் பாரசீக மதத்தினருக்கும் இந்துக்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமைகளைக் கண்டால் அவர்கள் கட்டாயம் இந்தியாவில் இருந்து சென்றவர்களே என்பது இன்னும் தெளிவாகிறது.

பார்ஸீ மத–இந்து மத ஒற்றுமைகளை தனிக் கட்டுரையில்-- இதன் இரண்டாம் பகுதியில்-- தந்துள்ளேன். படிக்கத் தவறாதீர்கள்.

இந்த விஷயம் முழுதும் ஆங்கிலத்தில் ஒரே கட்டுரையாகக் கொடுத்துள்ளேன்.

Contact swami_48@yahoo.com ;pictures are used from different sites.